Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 332

சனிக்கிழமை
25 ஒக்ரோபர் 2025

ஐப்பசி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

### சிறுநீரகம் செயலிழப்பு; இளைஞர் பரிதாபச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 25
சிறுநீரகச் செயலிழப்பு மற்றும் கிருமித்தொற்றுக் காரணமாக இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். பருத்தித்துறை மந்திகை பகுதியைச் சேர்ந்த குணசேகரம் மரிய 11

## போர்க்குற்றங்கள் தொடர்பான

# சர்வதேச விசாரணைகள் பிளவை ஏற்படுத்துமாம்!



### நாடாளுமன்றில் பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்ரோபர் 25**
**இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச அல்லது வெளியக விசாரணைகளை நடத்தினால், அது நாட்டில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.** 11



கொக்குவில்

## இந்துக் கல்லூரிப் படுகொலைகள் 38ஆவது நினைவேந்தல் நேற்று!

யாழ்ப்பாணம், ஒக். 25
இந்திய இராணுவத்தால் கொக்குவில் இந்துக் கல்லூரியில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்களின் 38 ஆவது நினைவேந்தல் நிகழ்வு, கொக்குவில் இந்துக் கல்லூரியின் நுழைவாயிலுக்கு அருகாக நேற்று இடம்பெற் 11

## இரு அரசியற் பிரமுகர்கள் இந்தியாவுக்குப் பயணம்!

கொழும்பு, ஒக். 25
ஆளும் மற்றும் எதிர்க்கட்சியை சேர்ந்த இரு அரசியல் பிரமுகர்கள் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள் 11

## கடற்பரப்புகளில் ஆபத்தான நிலை

*கடலுக்குச் செல்லவேண்டாம்*
*மீனவர்களுக்கு அறிவுறுத்தல்*

கொழும்பு, ஒக். 25
தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் குறைந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளதால் நாட்டின் 11

ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கல்

## நல்லூர் பிரதேச செயலகத்துக்கு தேசிய ரீதியில் இரு விருதுகள்!



யாழ்ப்பாணம், ஒக். 25
நாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட 'ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கல்' நிகழ்வில் நல்லூர்ப் பிரதேச செயலகத்துக்கு இரண்டு விருதுகள் கிடைத்துள்ளன. மத்திய சுற்றாடல் அதிகார சபையால் 11



ஆயுதக் குழுக்களுடன் தொடர்புடைய

## அரசியல்வாதிகள் விவரங்களை விரைவில் வெளிப்படுத்துவோம்

*அரசாங்கம் அறிவிப்பு*

கொழும்பு, ஒக். 25
ஆயுதக் குழுக்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளின் பெயர் விவரங்கள் விரைவில் வெளிப்படுத்தப்படும். அது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று அமைச்சர் நளிந்த 11

**முச்சந்தி முரளி**

"ஆட்சி மாறினாலும் உந்த உள்ளகப் பொறிமுறை எண்ட புலம்பல் மட்டும் மாறேலை கண்டியளோ"

## உடைமையில் கஞ்சா நபரொருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 25
கஞ்சாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது 11

யாழ்ப்பாணத்தில் திடீர் சுற்றிவளைப்பு

## ஹெரோய்னுடன் ஆறு பேர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 25
யாழ்ப்பாணம் மாவட்டப் பொலிஸாரால் வெவ்வேறு இடங்களில் நேற்று முன்னெடுக்கப்பட்ட 11



## ஆளணியை நிரப்புவதில் யாழ்.பல்கலை அசமந்தம்

பல்கலை ஊழியர் சங்கம் போராட்டம் நடத்த முடிவு 12

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 24.10.2025 | திகதி 24.10.2025 | திகதி 24.10.2025 | திகதி 24.10.2025 | திகதி 24.10.2025 | திகதி 24.10.2025 | திகதி 24.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4234 | சீட்டிழுப்பு இலக்கம் 1301 | சீட்டிழுப்பு இலக்கம் 0260 | சீட்டிழுப்பு இலக்கம் 2340 | சீட்டிழுப்பு இலக்கம் 5992 | சீட்டிழுப்பு இலக்கம் 2022 | சீட்டிழுப்பு இலக்கம் 0108 |
| ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கினம் ரிஷபம் | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து T | ஆங்கில எழுத்து D | ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கினம் மீனம் |
| | | | சுப்பர் இலக்கம் 10 | | | |
| வெற்றி இலக்கங்கள் 29 38 75 78 | வெற்றி இலக்கங்கள் 04 21 26 28 | வெற்றி இலக்கங்கள் 7 7 0 6 | வெற்றி இலக்கங்கள் 10 19 46 55 | வெற்றி இலக்கங்கள் 1 9 3 0 3 3 | வெற்றி இலக்கங்கள் 21 25 46 80 | வெற்றி இலக்கங்கள் 04 24 25 |
| விசேட எழுத்து D | | | | | விசேட எழுத்து Q | |

# வடமாகாண மீனவ மாநாடு முல்லையில் வெள்ளியன்று

யாழ்ப்பாணம், ஒக்.25

**தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் அனுசரணையுடன் வடமாகாணக் கடற்றொழிலாளர் இணையம், வடமாகாண மீனவ மாநாடொன்றை முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.**

அந்தவகையில் இந்த மாதம்31 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. வடமாகாணக் கடற்றொழிலாளர் இணையத்தின் செயற்குமுக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சுபாஸ் விருந்தினர் விடுதியில் வடமாகாணக் கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் பிரான்சிஸ் ஜோசப் தலைமையில் இடம்பெற்ற போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் மீன்பிடி அமைச்சர், பிரதியமைச்சர், வடமாகாணத்தின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண ஆளுநர், மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் மாவட்டச் செயலர்கள், நான்கு மாவட்டங்களின் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள், கரையோரப் பிரதேசங்களை நிர்வகிக்கின்ற பிரதேசசபை தவிசாளர்கள். நாரா, நைக்டா பணிப்பாளர்கள், கடற்றொழில் பரிசோதகர்கள், பேராசிரியர்கள், சூழலியலாளர் க்ள், புத்திஜீவிகள் மற்றும் மீனவ சங்கங்களின் சமாசங்களின் பிரதிநிதிகள் எனப் பலரை அழைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

## பரிசளித்த 2 யானைகளை திரும்பப்பெறும் தாய்லாந்து

கொழும்பு, ஒக்.25

இலங்கைக்குப் பரிசாக வழங்கிய இரண்டு யானைகளை மீண்டும் கொண்டுசெல்லத் தாய்லாந்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பில் இலங்கையுடன் எதிர்வரும் 28ஆம் திகதி தாய்லாந்து கலந்துரையாடல் நடத்த உள்ளது.

இந்த இரண்டு யானைகளின் வாழ்க்கை நிலை மோசமடைந்துள்ளதாகவும், தவறாக வழிநடத்தப்படுவதாகவும் அறியப்பட்டதையடுத்து அவற்றை மீண்டும் கொண்டு செல்லத் திட்டமிட்டுள்ளதாக தாய்லாந்து அராசாங்கம் தெரிவித்துள்ளது.

அவற்றை இலங்கையில் இருந்து விமானத்தில் கொண்டு செல்லத் திட்டமிட்டுள்ளதாகத் தாய்லாந்து நாட்டின் துணைப்பிரதமரும் இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சருமான சுசார்ட் சோம்க்ளின் தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை தாய்லாந்தினால் இலங்கைக்கு இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் அன்பளிப்பாக வழங்கப்பட்ட முத்துராஜா என்று அழைக்கப்படும் சக்சுரின் யானை நோய்வாய்ப்பட்டு மோசமான நிலையில் காணப்பட்டதையடுத்து அதனை தாய்லாந்து அரசாங்கம் கடந்த 2023ஆம் ஆண்டு மீளப்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவு அரசுக்குச் சவாலாகாது

### அமைச்சர் சமந்த தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.25

எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எவ்விதத்திலும் சவாலாக அமையாது என்று அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளுக்கு சவால் என்பதாலேயே ஒன்றிணைந்து பயணிப்பது தொடர்பாகப் பரிசீலிக்கின்றன. அது அந்தத் தரப்புகளின் சுயநல அரசியலின் வெளிப்பாடாகும். நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தவேளை அவர்கள் ஒன்றிணையவில்லை. போர் நடந்த காலகட்டத்தில்கூட இணைந்து பயணிக்கவில்லை. தற்போது இணைகின்றனர் எனில் அது அவர்களின் வங்குரோத்து அரசியலை வெளிப்படுத்துகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 24.10.2025 | தினம் வெள்ளிக்கிழமை | வெற்றி வாரம் 0700 |
| ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கம் 6 6 4 4 8 4 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி 24.10.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2966 | ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கம் 24 25 26 79 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 24.10.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கம் 07 32 39 77 | வெற்றி வாரம் 5027 |

| SASIRI | |
|---|---|
| திகதி 24.10.2025 | தினம் வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் 0798 | வெற்றி இலக்கம் 03 17 46 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 24.10.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| கடகம் | வெற்றி இலக்கம் 09 37 56 62 | சீட்டிழுப்பு வாரம் 4678 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 24.10.2025 | தினம் வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து X | சுப்பர் இலக்கம் 09 | வெற்றி இலக்கம் 14 45 66 74 | வெற்றி வாரம் 2142 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 24.10.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கம் 13 38 42 59 | வெற்றி வாரம் 2792 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி 22.10.2025 | தினம் புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கம் 19 20 29 67 | வெற்றி வாரம் 2172 |

## நாடாளுமன்றில் கறுப்பு எதிர்ப்பு!



கொழும்பு.ஒக்.25

வெலிகம பிரதேசசபைத் தலைவர் லசந்த விக்ரமசேகரவின் படுகொலையைக் கண்டித்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்ற சபை மண்டபத்துக்குள் கறுப்பு உடையில் வருகைதந்து எதிர்ப்பைப் பதிவுசெய்தனர்.

இதன்போது நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், நாட்டில் நிலவும் படுகொலைக் கலாசாரத்துக்கு முற்றுப் புள்ளியிடவேண்டும் என வலியுறுத்தி கறுப்பு உடையில் வந்தோம் - என்றார். (ச-இ)

## ரணிலையும் சஜித்தையும் சந்திக்க வைக்க முயற்சி

கொழும்பு, ஒக்.25

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையில் நேரடிச் சந்திப்பை நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

இருதரப்பு இணைவுக்காக இரு கட்சிகளில் இருந்தும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுவில் உள்ளவர்கள் பேச்சுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

பொதுவேலைத்திட்டத்தின்கீழ் இணைந்து பயணிப்பதற்குரிய இணக்கப்பாட்டை இருதரப்புகளும் எட்டிய பின்னர், இரு கட்சிகளின் தலைவர்களையும் சந்திக்க வைப்பதற்குரிய முயற்சிகளே இடம்பெற்றுவருகின்றன. இருவரும் இணைந்து கூட்டுச் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தவேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுவருகின்றது. அதையடுத்துப் பொதுவேலைத்திட்டத்தின்கீழ் ஒன்றிணைந்து, பொதுச்சின்னத்தில் பொதுப்பட்டியலின்கீழ் தேர்தல்களைச் சந்திப்பது பற்றித் தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வைத்தியப் பட்டதாரிகள் 304 பேருக்கு நவம்பரில் நியமனம்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு,ஒக்.25**

**304 சுதேச வைத்தியர் பதவி வெற்றிடங்களுக்கு 2009, 2010, 2011ஆகிய மூன்று கல்வியாண்டுகளில் பட்டப்படிப்பை நிறைவுசெய்தவர்களைக்கொண்டு நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி குறித்த 304 சுதேச வைத்திய நியமனங்களையும் வழங்கவிருக்கின்றோம் என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

சுதேச வைத்தியப் பட்டதாரிகளின் நியமனம் தொடர்பில் சுகாதார அமைச்சரிடம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கேள்வி எழுப்பியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டிலுள்ள சுதேச வைத்தியசாலைக் கட்டமைப்பிலே அனுமதிக்கப்பட்டுள்ள வைத்தியர் ஆளணியைவிடவும் அதிகமான அளவில், சுதேச பட்டதாரிகள் காணப்படுகின்றனர். கடந்த2025.06.30ஆம் திகதி நிலைவரப்படி இலங்கையின் சுதேச வைத்திய சேவையில் ஆயுர்வேதம், யுனானி, சித்தம் ஆகிய மூன்று வைத்தியத் துறைகளுக்குமாக 2 ஆயிரத்து 567 அனுமதிக்கப்பட்ட சுதேச வைத்தியர் ஆளணிகள் காணப்படுகின்றன. இருப்பினும் தற்போது 2 ஆயிரத்து 65 சுதேச வைத்தியர்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 502 சுதேச வைத்தியர்களின் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்தநிலையில் இலங்கை சுதேச வைத்திய சேவையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு அனுமதிகிடைத்துள்ளது.

அந்தவகையில் தற்போது நாட்டில் காணப்படும் 502 சுதேச வைத்தியர் வெற்றிடங்களில், 304 ஆரம்ப சுதேச வைத்திய அலுவலர் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச்செய்வதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன- என்றார். (ச-246,26)

## போதைப்பொருள் சோதனை; 1,947 ஆயுதங்கள் கைப்பற்றல்

கொழும்பு,ஒக்.25

நாட்டில் இந்த வருடத்தில் பாதாள உலக மற்றும் போதைப்பொருள் நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது மாத்திரம் ஆயிரத்து 947 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சில பாதாள உலகக் குழுக்கள் இன்னும் ஆயுதங்களை வைத்திருப்பதால் நாடு முழுவதும் துப்பாக்கிச்சூடுச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. நாட்டில் பாதாள உலகக் குழுக்களையும் போதைப் பொருள் அச்சுறுத்தலையும் அரசாங்கம் ஒழிக்கும். இதற்கு முறையான திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

## சட்டவிரோத மீன்பிடி; 28 பேர் கைது!

கொழும்பு,ஒக்.25

தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள் மற்றும் வெடிபொருள்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 28 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 8 டிங்கிப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கைக் கடற்படையினர், சிறப்பு அதிரடிப்படையுடன் இணைந்து கடந்த 15 நாள்களில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் இந்தக் கைது இடம்பெற்றது.

இந்த நடவடிக்கைகளில் கைதான சந்தேகநபர்கள் திருகோணமலை, ஈச்சலம்பத்துவ, குச்சவெளி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் உள்ள மீன்வள அலுவலகங்களில் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)



## மரணதண்டனைக் கைதிகளில் 21 பெண்கள், 5 மாணவர்கள்

கொழும்பு,ஒக்.25

நாட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளில் 805 ஆண்கள், 21 பெண்கள் மற்றும் 5 மாணவர்கள் அடங்கியுள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாளருமான ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் இந்த நாட்டின் எதிர்காலச் சந்ததியினரை அழித்து வருகின்றது. தென் மாகாணமே பாதாள உலக நடவடிக்கைகளில் முதலிடத்தில் உள்ளது.

படித்த சமூகம் கூலிக்குக் கொலை செய்யும் சமூகமாக மாறியுள்ளது. போதைப்பொருள் கடத்தல்காரர்கள் ஒரு தேசத்தை அழிக்கிறார்கள். எனவே மிகப்பெரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தூக்கிலிடப்படவேண்டும் - என்றார். (ச-இ)

## பெக்கோ சமனின் பஸ்கள் பறிமுதல்

கொழும்பு,ஒக்.25

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த பெக்கோ சமனுக்குச் சொந்தமான சொகுசு பேருந்துகள் இரண்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவினால் இந்த இரு பேருந்துகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இரு பேருந்துகளினதும் பெறுமதி 80 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)




## இஞ்ச என்னத்துக்கு அவை?-1

"நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்" எண்டு மாவிட்டபுரத்து மகாகவி சொன்னதெல்லாம் இப்ப காத்தில பறக்கிற காலம். முந்தியெல்லாம் இஞ்சயிருந்து போற தவில், நாதஸ்வர வித்துவான்மாருக்குத் தமிழகத்தில கடும் மதிப்பு. அதுக்கு நல்ல உதாரணம் தவில் மேதை தட்சணாமூர்த்தி. அவரின்ர விரல் தவில்மேளத்தில விளையாடுற வித்தைக்கு ஆருமே கிட்டவும் நிக்கேலாது. அதைமாதிரி இஞ்சயிருந்து அங்க போன சி.வை. தாமோதரம்பிள்ளைதான் அழிஞ்சுபோன பழங் காலத் தமிழ் நூல்களையெல்லாம் தேடிக் கண்டுபிடிச்சு, அதை அச்சில கொண்டு வந்தவர். நாவலரும் லேசுப் பட்டவர் இல்லையே. அவரின்ர நாவன்மைக்குத் தமிழகமே அடிமையா இருந்தது எண்டு சொல்லுவினம். அரிச்சந்திரா மயானகாண்டத்துக் கெண்டே பிறந்த வி.வி.வைரமுத்துவுக்கும் இந்தியாவில பெரிய ரசிகர் பட்டாளம் இருந்தது.

இப்பிடி இஞ்சத்தைக் கலைஞர்மாருக்குத் தமிழகத்தில ரசிகர்மார் இருந்தமாதிரி, தமிழகத்தில இருக்கிற சினிமாக்காரருக்கும் இஞ்ச விசிறியள் இருந்தவை, இருக்கினம். மற்றக்கலையளில தமிழகத்துக்கு ஈடு குடுக்கிற அளவுக்கு சினிமாவில மட்டும் எங்கட ஆக்களால சாதிக்கமுடியேலை. அதுக்குக் கனக்கக் காரணங்கள் இருக்கு. தமிழகத்தில சினிமாவைப் பாக்கிறதுக்கெண்டு கோடிக்கணக்கில ஆக்கள் இருக்கிறதும், அவையின்ர சினிமாப் படைப்பின்ர தரமும் இன்னமும் எங்களை அவையின்ர சினிமா அளவுக்கு முன்னேற விடேலை. எண்டாலும் எங்கட ஆக்களுக்கு ஓர்மம் கூட. எங்களுக்கெண்டொரு சினிமா உருவாக்கியே தீருவம் எண்ட வெறியோட கனகாலமா உழைச்சுக்கொண்டுதான் இருக்கினம். தமிழகத்தில படம் எடுக்க எங்கட வெளிநாட்டு ஆக்கள் தான் காசு குடுக்கினம். ஆனால் அதே வெளிநாட்டுக்காரர் எங்கடையாக்கள் படம் எடுக்க ஒரு சதம் கூட குடுக்காயினம். இப்பிடிப்பட்ட நிலையில எங்கட ஊரிலையும் படமெடுத்து, அதில லாபம் பாக்க முடியுமெண்டு நிரூபிச்ச எங்கட பெடியளின்ர திறமையை மதிச்சு, வெளிநாட்டுக்காரர் ஒருத்தர் அவையை வைச்சு படம் எடுக்க வெளிக்கிட்டிருக்கிறார். உண்மையில அவரின்ர நோக்கம் நல்லது, அதைப் பாராட் டத்தானே வேணும்.

ஆனால் இப்பிடி நல்லது செய்யவெளிக்கிட்டவர், அதுக்கு கண்ணூறு கழிக்கிறமாதிரியும் ஒரு காரியத்தைச் செய்ய நினைக்கிறார். எங்கட பெடியள் எங்கட கதையை வைச்சு எடுக்கப்போற படத்தின்ர தொடக்கவிழாவுக்கு தமிழக சினிமாப் பிரபலங்கள் தான் விருந்தினர்களாம். மருந்துக்கும் கூட எங்கட ஆக்கள் ஒருத்தருமில்லை. இப்பிடித் தொடக்கவிழாவுக்கு தென்னிந்திய சினிமாக்காரரை கூட்டிக்கொண்டு வந்தால் தான், அதைப் பற்றி எல்லாரும் கதைப்பினம், படத்தின்ர பப்ளிசிட்டிக்கு அது உதவும் எண்டு படத்தின்ர தயாரிப்பாளர் நினைக்கிறார் போல. ஆனால் பகிடி என்னெண்டால், எந்த தமிழக சினிமாவைக் குப்பை எண்டும், அதைவிட நல்லதா தரமா எங்கட சினிமாவை கொண்டு வருவம் எண்டும் வெளிக்கிட்ட பெடியளின்ர படத்துக்கு,அதே தமிழக சினிமாக்காரரைக் கொண்டு வந்து விளம்பரம் தேடுறதெல்லாம் நல்லதில்லைக் கண்டியளோ.

(அது ஏன் நல்லதில்லை எண்டதை நாளைக்குப் பாப்பம்)

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உறவினர்களாலும் நண்பர்களாலும் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற வீண்செலவுகள் மனதைச் சஞ்சலப்படுத்தும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மாலையில் வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**கடகம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதுடன் அவர்கள்மூலம் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள்வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம். ஒரு சிலருக்குத் தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தேவையான பணம் கிடைக்கும். சகோதரர்கள் பணம்கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம்செலுத்தவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. உறவினர்களுடன்பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால்,குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். அனுசரித்துச்செல்வது நல்லது. சிலருக்கு வேலை விஷயமாக வெளியில்செல்லநேரிடும் என்பதால் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**விருச்சிகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். பிள்ளைகள்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**தனுசு:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்துவிடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்குக் குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாகமுடிவதுடன், அதனால் எதிர்பார்த்த ஆதாயமும் கூடுதலாக இருக்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறிக்குப் பிறகுதான் முடியும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். அதிகப்படியான செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சகோதரர்களால் வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.



பளை மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் நிர்மாணித்த கல்லூரி நுழைவாயில், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. (ச-25,9)

# நூல் வெளியீடு

கொடிகாமம், ஒக்.25

மாற்றம் அறக்கட்டளையும், யாழ் மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய 'விடியல்' நூல் வெளியீட்டு நிகழ்வு மாற்றம் அறக்கட்டளை இயக்குநர் பே.பெனிக்னஸ் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளரும் தேசிய கல்வி நிறுவக வளவாளருமான கலாநிதி.பா.தனபாலன் மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்டச் செயலாளர் ம.பிரதீபன், கௌரவ விருந்தினராக வளர்பிறை இயக்குநர் அருட்பணி சூசை டேமியன் அடிகளார் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-17-159)



# யாழ். வர்த்தகர்களை சந்திக்கும் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வர்த்தகர்களுடனான கலந்துரையாடல், யாழ்.பொலிஸ் நிலையக் கேட்போர் கூடத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சகல வர்த்தகர்களுடனும் கலந்துரையாடவுள்ளனர். எனவே சகல வர்த்தகர்களையும் தவறாது கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

# பருத்தித்துறையில் பெண் நாய்களுக்கு இலவசக் கருத்தடை

யாழ்ப்பாணம், ஒக்.25

கட்டாக்காலி நாய்கள் பெருகுவதைத் தடுக்கும்முகமாக பருத்தித்துறைப் பிரதேச சபைப் பெண் நாய்களுக்கு இலவசக் கருத்தடைச் சிகிச்சை இன்று சனிக்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது.

இன்று காலை முதல் வியாபாரி மூலை கலைமணி சனசமூக நிலையத்தில் கருத்தடைச்சிகிச்சை நடைபெறும். ஜே/398, ஜே/399 கிராம சேவைப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது வளர்ப்பு நாய்களுக்குக் கருத்தடைச்சிகிச்சை மேற்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 17)

# விண்ணப்பங்கள் கோரல்

கொடிகாமம், ஒக். 25

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புபவர்கள் சங்கத்தின் தலைவர் சி.கா.கமலநாதன் 0777197067, செயலாளர் செ.த.குமரன் 0779773538, தேர்வுச் செயலாளர் செ.கந்தசத்தியதாசன், 0776132176 உபதேர்வுச் செயலாளர் ச.தில்லைமணி 0771350850 ஆகியோருடன் குறிப்பிட்ட வட்ஸ்அப் இலக்கங்கள்மூலம் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெறமுடியும்.

விண்ணப்பங்களைப் பிரதி எடுத்து பூரணப்படுத்தி உறுதிப்படுத்திய பின்னர் தேர்வுக் கட்டணமாக ஆயிரத்து 500 ரூபாவை 1133272 என்ற இலங்கை வங்கிக் கணக்கு இலக்கத்துக்கு வரவு வைத்து பற்றுச்சீட்டினைப் போட்டோப் பிரதி எடுத்து விண்ணப்பத்துடன் இணைத்து அடுத்தமாதம் [illegible] ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும்.

தலைவர், சைவப்புலவர் சி.கா.கமலநாதன், மாசேரி வரணி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ச-25,159)

# புலமைத்துவக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.25

அரசகரும மொழிகள் திணைக்களம், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் "தமிழ்மொழியின் வரலாற்று முக்கியத்துவமும் கலாசாரப் பெறுமதியும்" எனும் தொனிப்பொருளிலான புலமைத்துவக் கலந்துரையாடல் யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30மணியளவில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் தகைசார் விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா, யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன், அரசகரும மொழிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் திலக் நந்தன கெட்டியாராச்சி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். மேலும் உரையாளர்களாக பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி. சி.பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி.அ.சண் முகதாஸ், உருகுணைப் பல்கலைக்கழக சிங்களத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்மிக்க ஜயசிங்க, தென்னாடு பத்திரிகை ஆசிரியர் ஜீவா ஷஜீவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# ஏன் இத்தனை வாக்குறுதி...?

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் மிக விரைவில் நீக்கப்படும் என்றும், புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் இம்மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்திருக்கின்றார் நீதியமைச்சரான ஹர்ஷன நாணயக்கார. பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்ற வாக் குறுதியை அநுர அரசாங்கம் வழங்குவது இதுவொன்றும் முதல் முறையல்ல. ஆட்சிக்கு வந்த ஓர் ஆண்டுக்குள் விரல் விட்டு எண்ணிவிடமுடியாத அளவுக்கு, பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான கருத்தா டல்கள் இடம்பெற்றுள்ளன. எனினும் இன்றளவும் அந்தச் சட்டத்தை கைவிட்டபாடில்லை. அதிலும் குறிப்பாக, காலவரையறையொன்றை வெளிப்படை யாக அறிவித்து, பின்னர் ஏமாற்றுவதில் அநுர அரசாங்கம் இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களை எல்லாம் விஞ்சும் வகையில் நடக்கின்றது.

நீதியமைச்சரான இதே ஹர்ஷன நாணயக்காரதான், செப்ரெம்பர் மாதத்துக்குள் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்ற அறிவிப்பை முன்னர் விடுத்திருந்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கான கண்துடைப்பாகத்தான் அந்த அறிவிப்பு அமைந்ததாக அப்போதே பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. தற்போது, அதே அமைச்சர் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கம் தொடர்பில் மற்றொரு அறிவிப்பை விடுத்துள்ளார். தற்போதைய வாக்குறுதிகூட உரிய காலப் பகுதிக்குள் முறைப்படி நிறைவேறுமா ? என்ற சந்தேகமும் எழாமலில்லை. ஏனெனில், தற்போதைய பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக இயற்றப்படவுள்ள புதிய பயங்கரவாதத்தடைச் சட்டத்தை பொதுமக்களின் கருத்துக்கேட்புக்காக அரசாங்கம் விடவுள்ளது. நவம்பரின் மத்திய பகுதியில் இருந்து டிசெம்பர் மாதம் மத்திய பகுதிவரை கருத்துகள் கேட்கப்பட்டாலும், பின்னர் அவற்றைப் பகுத்தாய்ந்து - சேர்க்கவேண்டியதைச் சேர்த்து, நீக்கவேண்டியதை நீக்கி இறுதிப்படுத்த எப்படியும் ஜனவரி தாண்டிவிடும். அதன்பின்னர் எந்தத் தரப்பேனும் இந்த நடவடிக்கைகளை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தினால், மேலும் தாமதங்கள் ஏற்படவும் சாத்தியங்கள் மிகமிக அதிகம்.

நாட்டில் தற்போதுள்ள குற்றவியல் சட்டக்கோவையில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனை விதிப்பதென்பது சாதாரணமான விடயமாக உள்ளது. அநுர அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னரும் அத் தகைய நீண்டகால சிறைத்தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன. எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாகப் புதியதொரு சட்டம் தேவையுமில்லை அவசியமும் இல்லை என்பதே சட்டவல்லுநர்களின் கருத்தாக அமைந்துள்ளது. இவ்வாறான நிலையில்தான், புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உருவாக்குவதற்கு நேரத்தையும் காலத்தையும் வளங்களையும் ஆளணியையும் செலவிட்டு, தற்போதைய கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஆயுளை அதிகரிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுவருகின்றது.


1979ஆம் ஆண்டில் தற்காலிக ஏற்பாட்டுச் சட்டமாகவே பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. 'இதோ நீக்கப்படும்', 'எதிர்வரும் வருடம் நீக்கப்படும்' என்று கூறிக்கூறியே 35 வருடங்கள் முழுமையாக உருண்டோடிவிட்டன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பலியெடுப்புகள் ஏராளம், அது கொடுத்துள்ள பாதிப்புகள் ஏராளம். தற்போது அரசாங்கத்தில் உள்ளவர்கள், ஆயுதக்குழுக்களாக இருந்தபோது இதே பயங்கரவாதத் தடைச்சட்டம் அவர்களைத் தாறுமாறாக வேட்டையாடியது. எனவே, அரச தரப்பினர் அந்தச் சட்டத்தைத் தூக்கியெறிய வேண்டிய பொறுப்புடைத்தவர்களாகவும் உள்ளனர். எனவே காலத்தின் பொறுப்புணர்ந்து இதயசுத்தியோடு செயற்பட்டு, பொல்லாத இந்தச் சட்டத்துக்கு புதைகுழி தோண்டுவார்களா திசைகாட்டியினர்?

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

நூறு ஆசான்களுக்கு ஒப்பானவர் ஒரு பொறுப்புமிக்க தந்தை.

– மாத்யூஸ்–




# நிதியியல் இலக்குகளை 2026இல் அடையமுடியும்

## மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை




**கொழும்பு, ஒக்.25**

**இலங்கையின் பணவீக்க மற்றும் நிதியியல் நிலைத்தன்மைசார் இலக்குகள் அடுத்த வருடத்துக்குள் அடையப்படும். தற்போது பதிவாகியுள்ள மற்றும் எதிர்வுகூறப்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி வீதம் ஆரோக்கியமானதும், நிலையானதுமான மட்டத்தில் காணப்படுகின்றது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-
தற்போது அசாதாரண மட்டத்திலான பணச்சுருக்க நிலைமை பதிவாகியுள்ளது. ஆயினும் மத்திய வங்கியால் இலக்கிடப்பட்டுள்ளவாறு அடுத்த ஆண்டு பணவீக்கத்தை 5 சதவீத மட்டத்துக்குக் கொண்டுவரமுடியும் என எதிர்பார்க்கின்றோம். 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது தற்போது நிதியியல் ஸ்திரத்தன்மை குறிப்பிடத் தக்களவினால் முன்னேற்றமடைந்துள்ளது. பொருளாதார மீட்சியைப் பொறுத்தமட்டில், பொருளாதாரமானது தொடர்ச்சியாக 5 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்துவருகின்றது. 2022 -2023 ஆண்டு காலப்பகுதியில் முகங்கொடுக்க நேர்ந்த தீவிர நெருக் கடியின் பின்னர், இப்போது பதிவாகியிருக்கும் பொருளாதார வளர்ச்சியானது மிகவும் ஆரோக்கியமான மட்டத்தில் இருப்பதாகவே நான் கருதுகின்றேன்-என்றார். (எ-இ)

# போதைப்பொருள் பணப்பரிமாற்றம்; பெண் கைது

கொழும்பு.ஒக்.25
வெளிநாடுகளைத் தளமாகக்கொண்ட இரண்டு போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புடைய நிதிப் பரிவர்த்தனைகளை நிர்வகித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பைச் சேர்ந்த 28 வயதுடைய பெண்ணே இவ்வாறு சட்டவிரோதச்சொத்துகள் விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சட்டவிரோதப் பணப்பரிமாற்றம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-இ)



# பெக்கோ சமனின் மனைவிக்கு தொடர் மறியல்

கொழும்பு.ஒக்.25
பெக்கோ சமனின் மனைவி சாதிகா லக்ஷானி எதிர்வரும் 31ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
அவருக்கு எதிரான வழக்கு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# பிரமிட் திட்டம்; 7 பேர் கைது

கொழும்பு, ஒக்.25
பிரமிட் திட்டத்தை இயக்குதல், ஊக்குவித்தல் மற்றும் அந்தத் திட்டத்தை நிர்வகித்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் ஏழு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (ச-இ)

# ஏற்றுமதி வருவாய் 13 பில்லியன் டொலர்

கொழும்பு, ஒக்.25
2025 ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையிலான காலகட்டத்தில் இலங்கையின் ஏற்றுமதித்துறை தொடர்ந்து
நிலைத்தன்மையையும் நிலையான வளர்ச்சியையும் காட்டி மொத்த வருவாய் 12,986.52 மில்லியன் அமெரிக்க டொரைப் பதிவுசெய்துள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.
2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது இது 7 வீத அதிகரிப்பு ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை - ஐப்பசி 9
26.10.2025
சுபநேரம் : 09.03 - 10.33
ராகுகாலம் : 04.33 - 06.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

தனங்களப்பு - மன்னார் வீதியில் அமைந்துள்ள சகல வசதியும் கொண்ட வீடு மற்றும் காய்க்கும் தென்னைகள் நிறைந்த 60 பரப்பு தென்னந்தோட்டம் விற்பனைக்கு.
பகுதி பகுதியாகவும் விற்கப்படும். விலை பேசித் தீர்மானிக்கலாம்.

076 211 1267, 077 633 6059


**வேலையாட்கள் தேவை**

நியூமருதம் சைவ உணவகத்திற்கு சமையலாளர், சமையல் உதவியாளர் தேவை

தொடர்பு: 075 144 3303
076 848 6077

## 31ம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

தோற்றம்
19 . 03 . 1943



மறைவு
26 . 09 . 2025

### அமரர் காந்திமதி சின்னத்துரை

கடந்த 26.09.2025 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது அன்பு தெய்வத்தின் மறைவைக் கேள்வியுற்று ஆறாத்துயரில் கலந்து கொண்டவர்களுக்கும், எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவிகள் வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

பெருங்குளம் பிள்ளையார் கோவில் வீதி, கல்வயல், சாவகச்சேரி.
077 967 3788, 077 891 8150 (CS/46152) J-1 குடும்பத்தினர்

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10 . 12 . 1942



மறைவு
03 . 11 . 2016


### அமரர் கந்தையா பரமநாதன்

திதி : சதுர்த்தி

ஒன்பது ஆண்டுகள் ஆனாலும், அப்பா,
உங்கள் நினைவு எங்கள் இதயத்தில் நிலைத்திருக்கிறது.
நீங்கள் போன நாள் வீடு அமைதியாய் இருந்தது.
ஆனால் உங்கள் அன்பு எங்கும் ஒளிர்கிறது.
உங்கள் வார்த்தைகள் எங்களை வழிநடத்தும் நட்சத்திரம்,
உங்கள் சிரிப்பு இன்னும் மனதில் இசையாக ஒலிக்கிறது.
ஒவ்வொரு நினைவிலும் நீங்கள் நம்மோடு இருக்கிறீர்,
ஒவ்வொரு வெற்றியிலும் உங்கள் ஆசீர்வாதம் நம்மோடு உள்ளது.
வானத்தில் நீங்கள் ஓர் நட்சத்திரமாய் பிரகாசித்தாலும்,
எங்கள் இதயத்தில் என்றும் அப்பாவாய் நீங்கள் வாழ்கிறீர்.

4/3, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை. குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### பேரம்பலம் கந்தசாமி (புத்தா)

சாவகச்சேரி சரசாலை வடக்கினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் கந்தசாமி அவர்கள் கடந்த (23.10.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - தங்கமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - பூரணம் தம்பதியரின் மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தவமணி, சிவசுப்பிரமணியம் (SPS மணியம்) ஆகியோரின் சகோதரரும், சுதர்சன், சுசித்திரா, காலஞ்சென்றவர்களான பிரபாகர், சகிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், நவிலகுமாரன், றஜிதா, வினோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிருபன், லக்ஷா, றிவிசா, ஜெனிஸ்கா, கரிகாலன், விதுஜன், சந்தோஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை வடக்கு கொம்பிகுளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்வு
17.12.1949


உதிர்வு
[illegible]

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (CS/59716) J-1

தகவல்:
குடும்பத்தினர்
076 874 9221

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 01 . 1972

மறைவு 21 . 10 . 2025

## தர்மசேனன் ஜெயகுமார்

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மசேனன் ஜெயகுமார் கடந்த (21.10.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மசேனன் (பொலிஸ் உத்தியோகத்தர்) மற்றும் தவமலர் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் பராசக்தி தம்பதியரின் பாசமிகு மருமகனும், வசந்தி (யா/ஏழாலை இசிதோர் றோ.க.த.க பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், பிரவீனா, ஜெயந் (யா/மகாஜனா கல்லூரி தரம் 10, 8 மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்சினி (கொலண்ட்), கமலினி (கனடா), தர்மினி (ஜேர்மனி), சதீஸ் குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரரும், லோகநாதன் (கொலண்ட்), ஆனந்தராஜா (கனடா), சரவணபவன் (ஜேர்மனி), ரஜனி (பிரான்ஸ்), பிரதீபன், குமுதினி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான அன்னராசா, கவிராஜசிங்கம் மற்றும் கைலேந்திரன், சிவராஜா ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற கணேஸ்வரி மற்றும் சுந்தரராணி, சிவமலர் ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் இந்திரராணி, செல்வராணி ஆகியோரின் மருமகனும், அருள், அருண், ஆஷா, ஜெரெமி, ஜெசிக்கா, தர்ஷா, தனுஷா, தரணிகன், யதுர்சன், லிதுசன் ஆகியோரின் அன்பு மாமனும், மெலிஷா, மயுரிஷா, யூலிஷா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணியளவில் ஆனைக்கோட்டையில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைக்கோட்டை கறையான்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 30626) E

**சம்பந்தப்பிள்ளையார் கோவிலடி, ஆனைக்கோட்டை**

**தகவல் குடும்பத்தினர்**

# நவீன சந்தைக் கட்டடத்துக்கு சந்தையை இடமாற்றுங்கள்

## பருத்தித்துறையில் போராட்டம்




யாழ்ப்பாணம், ஒக்.25

பருத்தித்துறை நகரின் மத்தியில் உள்ள நவீன சந்தைக் கட்டடத்தொகுதிக்கு மரக்கறிச் சந்தையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தினரால் நேற்று வெள்ளிக்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ந்து பேரணியாகச் சென்று பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் வின்சென் டீபோல் டக்ளஸ் போல் மற்றும் செயலாளர் தாரணி கஜரூபன் ஆகியோரிடம் மனுவும் கையளிக்கப்பட்டது.

போராட்டத்துக்கு ஆதரவாக பருத்தித்துறை நகர் வர்த்தகர்கள் ஒரு மணி நேரம் கடைகளை மூடிப் பங்கேற்றிருந்தனர்.

போராட்டத்தில் பருத்தித்துறை நகர் முச்சக்கர வண்டிச் சேவை சங்கத்தினர், மரக்கறி வியாபாரிகள், பொது மக்கள் எனப் பெருமளவானோர் பங்கேற்றனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில், பண்டைய காலம் முதல் வடக்கு மாகாணத்தில் வர்த்தகத் தலைநகராக புகழ்பெற்று விளங்கும் பருத்தித்துறை நகர் இன்று அதன் பொலிவினை இழந்து காணப்படுகிறது.

பருத்தித்துறை மரக்கறிச் சந்தை வேறு இடத்துக்கு மாற்றப்பட்டதன் பின்னர் பருத்தித்துறை நகர் வர்த்தகநடவடிக்கை பெரிதும் வீழ்ச்சி நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதனை அவதானிக்கமுடிகிறது. வர்த்தக சமூகம், பொதுச்சந்தைத் தொகுதி, போக்குவரத்து சேவைகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட இணைந்த செயற்பாடுகளே ஒரு நகரத்தின் வளர்ச்சியை சாத்தியமாக்குகின்றன.

எனவே நகரசபைக்குச் சொந்தமான நவீன சந்தைக் கட்டடத்தொகுதியில் மரக்கறி சந்தையை மீளவும் செயற்படுத்துவதற்கு விரைவான நடவடிக்கையினை மேற்கொள்வதன் ஊடாக மேற்குறித்த சகல நிலைகளையும் வலுப்படுத்தி பருத்தித்துறை நகரின் வளர்ச்சிக்கு உத்வேகமளிக்க முடியும் - என்றனர். (ச-100)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை
### தம்பகாமம் வட்டாரத்திற்கான ஆதனங்களின் ஆவணங்கள் கோருதல்

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையானது தம்பகாமம் வட்டாரத்திலுள்ள ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் தம்பகாமம் கிராம அலுவலகத்திற்குட்பட்ட (KN/86) ஆதனங்களின் உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள் கீழ்வரும் ஆவணங்களினை சரிபார்த்து உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக அவற்றின் மூலப்பிரதிகளுடன் நிழற்படப் பிரதிகளையும் எதிர்வரும் 27.10.2025 ஆம் திகதி தொடக்கம் 07.11.2025 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

1. காணி உறுதி
2. நில அளவைப்படம்
3. தேசிய அடையாள அட்டை
4. 30 வருடத் தோம்பு

சுப்பிரமணியம் சுரேன்,
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை. 25.10.2025

## நானாட்டான் பிரதேச சபை
## வரைவு வரவு செலவுத் திட்டம் - 2026

நானாட்டான் பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரைபு வரவு செலவுத்திட்டம் 2025.10.21 ஆம் திகதிய சபை கூட்டத்தின் மூலம் கீழ்வருமாறு முன்மொழிவு செய்யப்படுகின்றது. இவ் வரைவு வரவு செலவு திட்டம் தொடர்பான கருத்துக்களை 2025.11.03 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு தெரிவிக்க முடியும். மேலதிக விபரங்களை நானாட்டான் பிரதேச சபை பிரதான அலுவலகம், உப அலுவலகங்களிலும், சபையின் இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

இணையத்தள முகவரி -**nanattan.ps.gov.lk**
தொடர்புகளுக்கு - 0232050652

| | நிகழ்ச்சித் திட்ட விபரம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | மதிப்பிடப்பட்ட செலவினம் | பற்றாக் குறை | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | பொது நிர்வாகம் | 87,635,141.80 | 47,234,540.00 | | 40,400,601.80 |
| 2 | சுகாதார சேவைகள் | 4,622,750.00 | 23,952,576.00 | (19,329,826.00) | |
| 3 | பௌதீக திட்டமிடல் | 53,311,400.00 | 84,083,884.00 | (30,772,484.00) | |
| 4 | தண்ணீர் சேவை | 150,000.00 | 380,000.00 | (230,000.00) | |
| 5 | பொதுப்பயன்பாட்டுச் சேவை | 13,284,000.00 | 360,000.00 | | 12,924,000.00 |
| 6 | நலன்புரிச் சேவை | 2,023,000.00 | 5,013,400.00 | (2,990,400.00) | |
| | **மொத்தம்** | **161,026,291.80** | **161,024,400.00** | **(53,322,710.00)** | **53,324,601.80** |

| | |
|---|---|
| மொத்த பெறுகைகள் | 161,026,291.80 |
| மொத்த செலவினம் | 161,024,400.00 |
| செலவீனத்தை மிஞ்சிய வருமானம் | **1,891.80** |

| | |
|---|---|
| சொந்த வருமானத்தில் மூலதன செலவு | **34,050,000.00** |
| மொத்த வருமானத்தில் மூலதன செலவு | **75,050,000.00** |

தவிசாளர்
நானாட்டான் பிரதேச சபை

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய அக்கா

### அமரர் மனுவல் சவிரியம்மா



அவர்களின் மறைவினால் கவலையுற்றிருக்கும் அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் துயருறும்:**
**திரு.திருமதி வின்சன் சவிரியம்மா குடும்பத்தினர்**

**தோற்றம் 23.12.1934 மறைவு 23.10.2025**

(CS 59713) E

## துயர் பகிர்கின்றோம்



**தோற்றம் 14.06.1940 மறைவு 20.10.2025**

எமது பணிப்பாளர் சபை உறுப்பினர்
திரு.பா.சத்தியன் அவர்களின் தந்தையார்,
முன்னாள் புகையிரத நிலைய அதிபர்

### சுவாமிநாதன் பாலேந்திரன்

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**இயக்குனர்சபை அங்கத்தவர்கள்,**
**செயலாளர், நிர்வாகத்தினர்.**
**யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார சங்கம்**
**530, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BID

1. The Chairman, Procurement Committee of University of Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the following works:

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Required CIDA Grade and Specialty | Required Bid Security Amount and period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE/ C2/2025/25 | Supply and Installation of Air Conditioning System and Electrical Works at Auditorium, Faculty of Agriculture, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi | 16.05 | 60 | C7 or above (Building Construction) OR EM4 or above (Electrical Installation - Low Voltage) | Rs. 165,000.00 10.03.2026 | Rs. 4,500.00 |
| 2 | YA/CWP/RE/ C2/2025/26 | Renovation of Female Hostels, University of Jaffna, Ariviyanagar, Kilinochchi | 12.53 | 90 | C7 or above (Building Construction) | Rs. 130,000.00 10.03.2026 | Rs. 3,500.00 |
| 3 | YA/CWP/RE/ C2/2025/27 | Improvement of Administration Block, Stage - II, Faculty of Agriculture, University of Jaffna, Ariviyanagar, Kilinochchi | 8.05 | 90 | C8 or above (Building Construction) | Rs. 85,000.00 10.03.2026 | Rs. 3,000.00 |
| 4 | YA/CWP/RE/ C2/2025/28 | Construction of Entrance Gate at Faculty of Engineering, University of Jaffna, Ariviyanagar, Kilinochchi | 6.16 | 120 | C8 or above (Building Construction) | Rs. 65,000.00 10.03.2026 | Rs. 2,500.00 |
| 5 | YA/CWP/RE/ C2/2025/29 | Supply and Installation of Air Conditioner for the Department of Music, Sir Ponnambalam Ramanathan Faculty of Visual and Performing Arts, University of Jaffna | 2.77 | 45 | C9 or above (Building Construction) OR EM5 or above (Electrical Installation - Low Voltage) | Rs. 30,000.00 10.03.2026 | Rs. 1,000.00 |
| 6 | YA/CWP/RE/ C1/2025/30 | Supply and Installation of Socket Outlets with Wiring and Direct Lightning Protection System for the New Board Room, University of Jaffna | 2.25 | 45 | C9 or above (Building Construction) OR EM5 or above (Electrical Installation - Low Voltage) | Rs. 25,000.00 10.03.2026 | Rs. 1,000.00 |
| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Required CIDA Grade and Specialty | Required Bid Security Amount and period | Non-refundable fee |
| 7 | YA/CWP/RE/ C1/2025/31 | Renovation of Male & Female Toilets of the Skill Laboratory and Conference Hall at Faculty of Medicine, University of Jaffna | 5.24 | 75 | C8 or above (Building Construction) | Rs. 55,000.00 10.03.2026 | Rs. 2,000.00 |
| 8 | YA/CWP/RE/ C1/2025/32 | Construction of Road and Widening the Existing Road at Main Premises, University of Jaffna | 5.77 | 60 | C8 or above (Building Construction) | Rs. 58,000.00 10.03.2026 | Rs. 2,100.00 |
| 9 | YA/CWP/RE/ C1/2025/33 | Renovation of Senior Common Room Block at University of Jaffna | 7.74 | 75 | C8 or above (Building Construction) | Rs. 78,000.00 10.03.2026 | Rs. 3,000.00 |
| 10 | YA/CWP/RE/ C1/2025/34 | Extension of Record Room at Main Premises, University of Jaffna | 9.70 | 120 | C8 or above (Building Construction) | Rs. 97,000.00 10.03.2026 | Rs. 3,500.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for the contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the relevant field with the Construction Industry Development Authority (CIDA), as specified in the table above
4. Interested bidders may obtain further information from Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna and view the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs. Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna from 27th October 2025 until 10th November 2025 from 9:00 hrs to 16:00 hrs and upon payment of a non-refundable fee detail given above table to be deposited to the Peoples Bank with the Reference No "97000060000276" should be filled in the Account Number column in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch, to reach on or before 10:00 hrs on the 11th November, 2025. Bids will be opened soon after closing, at 10.00 hrs on the 11th November, 2025 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of 91 Days from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of "Vice Chancellor, University of Jaffna."
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9
9. Pre bid meeting will be held at the Engineering Services Division, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi at 10.00 hrs on the 03rd November, 2025 for the bid No. 01 to 04 and at the Board Room, University of Jaffna, Thirunelvely at 10.00 hrs on the 04th November, 2025 for the bid No. 05 to 10.

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
25.10.2025

(CR46166) J-1



# நுணாவில் தேவாலய வீதி புனரமைப்பு ஆரம்பம்

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் வட்டாரத்தின் தேவாலய வீதியின் புனரமைப்புப் பணிகள் அண்மையில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. நிகழ்வில் நகராட்சிமன்ற உபதவிசாளர் ஞா.கிஷோர் கலந்துகொண்டு புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்துவைத்தார். நுணாவில் மற்றும் மறவன் புலவுக் கிராமங்களை இணைக்கின்ற குறித்த வீதியூடாகவே கொல்லங்கராய் இந்துமயானத்துக்கும், வயல்நிலங்களுக்கும் மக்கள் பயணம் மேற் கொள்கின்றனர். குறித்த வீதி நீண்டகாலமாகச் சேதமடைந்து காணப்பட்டநிலையில் நகரசபை உறுப்பினர் கோகுல்றாஜின் முயற்சியில் நகராட்சி மன்றத்தின் சுமார் 6.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வீதி மற்றும் அதனோடு இணைந்த குளக்கரைக்கட்டு என்பன புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

(ச-28)


## வீடு வாடகைக்கு உண்டு

யாழ் நல்லூர் கோவிலுக்கு அண்மையில்
வீடு வாடகைக்கு உண்டு.
இருவர் அல்லது மூவர் கொண்ட
குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
075 497 3042

## திருநெல்வேலி காணி விற்பனைக்கு

பரப்பு - 02, 2 1/2, 01
மக்கள் வங்கி - 100 மீற்றர்
பலாலி வீதி - 75 மீற்றர்
தொடர்புகளுக்கு:-
077 253 2575

## வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| மேசன் | - Rs.3500.00 |
| மேசன் உதவியாளர் | - Rs.2500.00-3000.00 |
| வயறிங் வேலை (அனுபவமுள்ளவர்கள்) | - Rs.3000.00-3500.00 |
| தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) | - Rs.3500.00-3500.00 |
| பெயின்ரர் (அனுபவமுள்ளவர்கள்) | - Rs.3000.00 |

தினசரி சம்பளம் வழங்கப்படும்
(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்)
**தொடர்பு:-0777245399** (காலை 8.00- மாலை 5.30 வரை)
யாழ்ப்பாணம்.


## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
## 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் (வரைவு)
## பொது மக்கள் பார்வைக்கு

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட வரைவு பொது மக்கள் பார்வைக்காக 2025.10.27 இலிருந்து 2025.11.10 ஆம் திகதி வரை வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை மற்றும் சபையினது நூலகங்களான ஓமந்தை பொது நூலகம், கூமாங்குளம் பொது நூலகம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டில் வருமானங்கள், செலவினங்கள் சம்பந்தமான விடயங்களும் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பார்வையிட்டு அபிப்பிராயங்கள் இருப்பின் செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நெளுக்குளம் என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ 2025.11.10 ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்க முடியும் என்பதை அறியத்தருகிறேன்.

வரைவு வரவு செலவுத்திட்ட சுருக்க அறிக்கை

**வருமானம்**

| | |
|---|---|
| சபையின் சொந்த வருமானம் | -100,451,433.83 |
| நன்கொடைகள் மற்றும் மீள்நிரம்பல்கள் | - 48,960,200.00 |
| எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் | -149,411,633.83 |

**செலவினம்**

| | |
|---|---|
| மீண்டெழும் செலவினம் | - 126,379,700.00 |
| மூலதன செலவினம் | - 23,029,400.00 |
| எதிர்பார்க்கப்படும் மொத்த செலவினம் | - 149,409,100.00 |

**தலைவர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாளக் குழுவினரை ஒழிக்க தேசிய வேலைத்திட்டம் தயார்

## அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு

**கொழும்பு,ஒக்.25**

**பாதாளக் குழுவினரின் செயற்பாடு மற்றும் போதைப்பொருள் என்பவற்றுக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும். அதற்குரிய தேசிய வேலைத்திட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எத்தகைய சவால்கள் வந்தாலும் இந்த விடயத்தில் பின்வாங்கப் போவதில்லை.

நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்படும். ஒழுக்க விழுமிய முடைய சமூகமொன்று உருவாக்கப்படும் என நாட்டு மக்களுக்கு நாம் உறுதியளித்துள்ளோம்.

அதற்கமைய நடவடிக்கை இடம் பெற்றுவருகின்றது. அரசியல் மயமாக்கலில் இருந்து விடுபட்டு பொலிஸார் தற்போது சுயாதீன மாகச் செயற்பட்டுவருகின்றனர். இவ்வாறு சட்டம் தமக்குரிய கடமையைச் செய்யும்போது சிலருக்கு நடுக்கம் ஏற்பட்டுள்ளது. அத்தகையவர்களே கலக்க மடைந்து கத்துகின்றனர். எது எப்படி இருந்தாலும், பாதாளக்குழுவினரின் செயற்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். அதற்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 30ஆம் திகதி தேசிய வேலைத்திட்டம் ஆரம்பமாகவுள்ளது - என்றார். (க-44)

# நாடாளுமன்றத்துக்குள்ளும் துப்பாக்கிச்சூடு நடக்கலாம்

## சுஜீவ சேனசிங்க எம்.பி. அச்சம்

கொழும்பு, ஒக்.25

நீதிமன்றத்துக்குள் இடம்பெறும் துப்பாக்கிச்சூடுகள், எதிர்காலத்தில் நாடாளுமன்றத்துக்குள்கூட இடம்பெற வாய்ப்புள்ளது. வெலிகம பிரதேசசபைத் தலைவரது கொலை தொடர்பில் அரசாங்கம் பொறுப்பற்றவகையிலேயே கருத்துகளைக் கூறுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்ற பின்னர் கடந்த ஓராண்டு காலத்துக்குள் குற்றச்செயல்கள் பெரியளவில் அதிகரித்துள்ளன.

கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்ற போது, குற்றவாளிகளானாலும் அவர்களைக் கொல்வதற்கு எவருக்கும் உரிமையில்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எதிர்க்கட்சியிலிருந்து தெரிவித்திருந்தார். தற்போது வெலிகம பிரதேசசபைக் கட்டடத்துக்குள் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளமைக்கு அரசாங்கத்திடமிருந்து ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்தவொரு பதிலும் வழங்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் இவை தொடர்பில் உரையாற்றினாலும் வெளியில் நடமாடுவதற்கு அச்சமாகவுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் பேசும் அனைவருக்கும் உயிர் அச்சுறுத்தல் காணப்படுகிறது - என்றார். (எ-இ)



நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலயத்தின் கந்தசஷ்டி விரத உற்சவத்தின் முதலாம் நாள் திருவிழா கடந்த புதன்கிழமை சிறப்புற இடம்பெற்றது. இதன்போது விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று சித்திர வேலாயுதர் வீதியுலா வருகைதந்தார். (ச-41-159)

# மக்களின்மீது பற்று இருந்தாலே போதைப்பொருளை ஒழிக்கலாம்

## கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக்.25

மக்கள்மீது உண்மையான பற்றுக்கொண்ட அரசாங்கம் ஒன்றினால் மாத்திரமே போதைப்பொருளை முற்றுமுழுதாக ஒழிக்கமுடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருளைப் பரப்புவதில் இராணுவத்தினருக்குப் பெரும் பங்கு உள்ளது. போர்க்காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் போதைப்பொருள் பூச்சியப் பாவனையில் இருந்தது. அவர்கள் மக்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற விருப்பத்துடன் இயங்கியதால் இது சாத்தியமானது. இந்தக் காலப்பகுதியில் வடக்கில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் இருந்தமையால் அங்கு போதை அச்சுறுத்தல் குறைந்த அளவிலேயே இருந்தது. போர் மௌனிக்கப்பட்ட 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரே வடக்கில் பெரியளவில் போதைப்பொருள் பரவல் தொடங்கியுள்ளது. இராணுவத்தினரே இந்த நடவடிக்கையில் முழுவீச்சுடன் ஈடுபட்டுவருகின்றனர்.

இன்று சில பகுதிகளில் சமூகவிரோதிகளுக்கு அடைக்கலம் தரும் இடமாக இராணுவ முகாம் மாறியுள்ளது. விடுதலைப் புலிகளின் புரட்சியைத் தோற்கடிப்பதற்கு இராணுவத்தின் ஊடாகப் பயன்படுத்தப்பட்ட போதைப்பொருள் என்ற புற்றுநோய் இன்று தெற்குவரை பரவியுள்ளது.

போதைப்பொருள் பரவலில் இராணுவத்துக்கு உள்ள தொடர்பு குறித்த தேடிப்பார்க்கவேண்டும். பொலிஸ், கல்வி, சுகாதாரப் போன்ற சமூகத்துக்கு மிகவும் தேவைப்படும் விடயங்களை அந்ததந்த மக்களிடமே விடவேண்டும். அப்போதுதான் தங்களது மக்களுக்குத் தாம் பொறுப்பானர்கள் என்ற உணர்வு ஏற்படும். வடக்கு, கிழக்குடன் எவ்விதத் தொடர்பில்லாத தரப்பினரால் அங்குள்ள பிரச்சினைகளை ஒருபோதும் தீர்க்கமுடியாது.

அரசாங்கம் எடுக்கும் போதைப்பொருள் ஒழிப்புத் தேசிய வேலைத்திட்டத்துக்கு எம்மால் பூரண ஆதரவு வழங்கப்படும். நிபுணத்துவம் பெற்றவர்களை மாத்திரம் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தினால் மாத்திரமே போதைப்பொருள் ஒழிப்பு என்பது சாத்தியப்படும். போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு மாறாகப் போதைப்பொருளை விற்பவர்களே தண்டிக்கப்படவேண்டும் - என்றார். (எ-இ)


# வீதியில் கழிவுகள் வீசல் அசௌகரியத்தில் மக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ்ப்பாண பிரதான அங்காடிக் கடைகள் அமைந்த இடமான கந்தப்பசேகர வீதி, பழைய கரன் தியேட்டர் அருகாமையில் உணவுக்கழிவுகள் போடப்படுவதால் அங்கு துர்நாற்றம் வீசுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் மாநகரசபை உறுப்பினர்களான பிரதி மேயர் தயாளன், சாருஜன் மற்றும் சதீஸ் ஆகியோர் குறித்த இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

அதற்கமைய குறித்த கழிவுகளை உடனடியாக அகற்றி காணி உரிமையாளர்கள் இல்லாதவிடத்து மாநகரசபையால் சுற்றிவர வேலி அமைத்து, கண்காணிப்புக் கமரா மூலமாக கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மாநகர சபை தீர்மானித்துள்ளது. (ச-27)



நாடாளுமன்றத்துக்கு

# தீ வைக்க முயன்றவர்களை தண்டித்திருக்கவேண்டும்

## கொதிக்கிறார் தலதா அத்துகோரள



கொழும்பு, ஒக்.25

நாடாளுமன்றத்தைத் தீயிடுவதற்கு வந்த நபர்களுக்கு எதிராக அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்களில் 50 சதவீதமானோர் தற்போது தமது முடிவை மாற்றிக்கொண்டுள்ளனர். எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றை ஒன்றிணைப்பதற்குரிய முயற்சி இவ்வருடத்துக்குள் வெற்றியளிக்கும் என எதிர்பார்க்கின்றோம் -என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 05 . 1961



மறைவு 23 . 10 . 2025

### இராசையா சிவானந்தராசா

காரைநகர் மணற்பிட்டியை பிறப்பிடமாகவும், 124/2 பலாலி வீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சிவானந்தராசா அவர்கள் (23.10.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பார்வதி தம்பதியரின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்ற ஆனந்தராசா (லண்டன்) மற்றும் சர்வானந்தராசா (லண்டன்), சற்குணராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

124/2 பலாலி வீதி,
திருநெல்வேலி

தகவல்: சகோதரர்கள்
075 964 0014

## மரண அறிவித்தல்

மண்ணில் 01 . 06 . 1942



விண்ணில் 22 . 10 . 2025

### அருளம்பலம் ஆறுமுகம்

(முன்னாள் வர்த்தகர், யாழ். நவம் அண்ட் கோ,
முன்னாள் பொருளாளர், மாத்தோட்டை சிவஞான வைரவர் ஆலயம்,
முன்னாள் பொருளாளார், சிவஞானவைரவர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்)

இமையாணன் வடக்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் ஆறுமுகம் 22 ஆம் திகதி புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காசிப்பிள்ளை- பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சந்திரிகா(சுவிஸ்), சதீஷ் (லண்டன்), சுரேஷ் (சுரேன் - லண்டன்), சரண்யா ( அபிவிருத்தி உத்தியோகத்தர், பருத்தித்துறைக் கோட்டம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், உமாபாலன் (சுவிஸ்).ரகுனா ( லண்டன்) , சசிதாதேவி (லண்டன்), பிரபாகரன் (ஆசிரியர் , உதயன் பத்திரிகை, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமனாரும், சந்தோஷ் (சுவிஸ்) ஆகாஷ் (சுவிஸ்), தஷ்வென் (லண்டன்), திலானி (லண்டன்) , ஷாத்விகன் (லண்டன்), ஔஷதன், ஔரீஷன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் இமையாணன் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்.

## ஊராட்சி முற்றக்கூட்டம்

வடமாகாண மகளிர்விவகார அமைச்சின் ஏற்பாட்டில், கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன், 2025ஆம் ஆண்டுக்கான இரண்டாம் காலாண்டு ஊராட்சி முற்றக் கூட்டம் யாழ். மாவட்டச்செயலகமாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. மக்கள்எதிர் நோக்கும் பல்துறை சார் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் தேவைப்பாடுகள் தொடர்பாக ஊராட்சி முற்றத்தில் கலந்துரையாடித் தீர்வு வழங்குவதை நோக்காகக்கொண்டு இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. அத்துடன் ஊராட்சி முற்ற அஞ்சல்பெட்டிவைக்க வேண்டிய இடங்கள் மற்றும் குறிகாட்டுவான் இறங்குதுறையில் நிலவும் பிரச்சினை தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. (க-66)

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 03 . 1945



மறைவு 24 . 10 . 2025

### பரமேஸ்வரி நாகராசா

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி நாகராசா வெள்ளிக்கிழமை (24.10.2025) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகராசாவின் ஆசை மனைவியும், நாகேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி, அன்னம்மா மற்றும் ஞானேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், ரமேஸ் (Norway), ரமணன் (Canada), அஞ்சனா (Canada), அனுபமா (Canada), அகல்யா (Union Bank Regional Credit Manager) ஆகியோரின் அன்புத் தாயாரும், எலின் (Norway), றஜீத்தா (Alaveddy), குணராஜா (Canada), வரதராஜா (Canada), பாபுஜீ (Manager HNB Batticaloa) ஆகியோரின் அன்பு மாமியும் எம்மி அஜந்தா, மாயா, மார்ட்டின், எலட், மதுமிதா, கோபிசன், சஞ்சீவ், சாம்பவி, சாருகா, ஓவியன், ஓவியா, பூஜா ஆகியோரின் அன்பு பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது சங்கத்தானை இல்லத்தில் நாளை (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


(CS 59720) E

சப்பச்சிமாவடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி

தகவல்: குடும்பத்தினர்
077 529 6242, 077 755 8242

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 02 . 1947



மறைவு 24 . 10 . 2025

### விநாசித்தம்பி சிவகுமாரன்

(ஓய்வு பெற்ற நீர்ப்பாசன திணைக்களம் தொழிநுட்ப உதவியாளர் T.A)

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும் கொக்குவில் 94 ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி சிவகுமாரன் (Ret T.A) நேற்று (24.10.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை விநாசித்தம்பி (பிரசித்த நொத்தரிசு) - மங்கையக்கரசி தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம் (RMP) - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சினியின் அன்புக் கணவரும், செந்தூரன் (பொறியியலாளர் கனடா), பிரசாந்தி ஆகியோரின் அன்பு தந்தையும், சற்சொரூபன் (வர்த்தக வங்கி - மட்டக்களப்பு), தர்சிகா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சபிஷா, சுருதீஸ், சர்யூன், சாயிஷா, ஆதிரா ஆகியோரின் அன்பு பேரனும், திருமதி ஜானகி, காலஞ்சென்ற சிவானந்தன், சிவராசா, சிவபாலன், காலஞ்சென்ற சகுந்தலா, திருமதி அனுசியா, காலஞ்சென்ற திருமகள், தேவகி ஆகியோரின் சகோதரரும், ராகினி, சிவபாலன், சிவகுமார், திருமதி நந்தினி, திருமதி ஜெயந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

94, ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

தகவல்:
(மருமகன்) தெ. செற்சொருபன்
077 918 4638

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலும், சஜித்தும் இணைவது நல்லதே

## நாமல் வெளிப்படை

கொழும்பு, ஒக். 25

ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைவதை வரவேற்கின்றேன். அவ்வாறு ஒன்றிணைந்தால் அது நாட்டின் அரசியலுக்கு நல்லது இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில், சஜித் ஆகியோர் ஒன்றிணைய வேண்டும் என்பதை கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதே நான் கூறியிருந்தேன்.

அவர்கள் ஒருமித்த கொள்கையை கொண்ட கட்சிகளில் இருக்கின்றனர்.

அரசியல் ரீதியில் இணைவதற்கு எவ்வித தடையும் இல்லை. அவ்வாறு இணைவது நல்லது. அதை நாங்கள் வரவேற்போம். அதேநேரம், இந்த இணைவானது எமக்குச் சவாலாக அமையாது - என்றார். (ம-44)

# மாகாணசபைத் தேர்தல் தாமதத்துக்கு தேர்தல் ஆணைக்குழு பொறுப்பல்ல!

## ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.25

மாகாணசபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவது குறித்துத் தேர்தல்கள் ஆணைக்குழுமீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாலும், அதற்கான பொறுப்பை நாடாளுமன்றமே ஏற்கவேண்டும்.

பொருத்தமான முறைமையை நாடாளுமன்றம் தேர்வு செய்தால், எந்தச் சந்தர்ப்பத்திலும் மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை குருநாகலில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மாகாணசபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவதற்கு எம்மால் எந்த வகையிலும் பொறுப்புகூறமுடியாது.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு தற்போது நாட்டில் சட்டமொன்று இல்லை. இந்தப் பொறுப்பு நாடாளுமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.

தற்போது இறுதித் தீர்மானத்தை எடுக்கக்கூடிய பொறுப்பு நாடாளுமன்றத்திடமே உள்ளது.

தேர்தல் முறைமை தேர்வுசெய்யப்படும் பட்சத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் எம்மால் தேர்தலை நடத்தமுடியும்.

அனைவரும் இந்தப் பொறுப்பை ஏற்று ஒற்றுமையுடன் அதை நிறைவேற்றவேண்டும். அதைவிடுத்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் பக்கம் பந்தைத் தள்ளிவிடுவது பொருத்தமற்றது-என்றார். (எ-இ)

# மாதாந்தத் திரையிடல்

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாண திரைப்படக் கழகத்தின் மாதாந்த திரையிடல் நிகழ்வு கந்தர் மடத்தில் உள்ள 'எங்கட புத்தகங்கள்' அலுவலகத்தில் இன்று மாலை 3.30 மணியளவில் நடைபெறவுள்ளது. மார்ட்டின் விக்கிரமசிங்க எழுதிய நாவலை அடிப்படையாகக் கொண்டு 'விராகய' என்ற பெயரில் எடுக்கப்பட்ட சிங்களத் திரைப்படமே இவ்வாறு காண்பிக்கப்படவுள்ளது. திஸ்ஸ அபயசேகர நெறிப்படுத்தியுள்ளார். ஆங்கிலத் துணைத் தலைப்புடன் காண்பிக்கவிருக்கும் இந்தத் திரைப்படம் 1987ஆம் ஆண்டில் வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

### சர்வதேச...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் அரசாங்கம் உடன்படவில்லை. நாட்டில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே மக்கள் எம்மிடம் அதிகாரங்களை வழங்கியுள்ளனர்.

இந்த வாய்ப்பை பயன்படுத்தி, மக்களுக்கு இயன்றவரை சேவை வழங்கி வருகின்றோம்.

வெளிப்புற நடவடிக்கைகள் நாட்டில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தும். அந்த செயன்முறையானது உள்ளக செயற்பாடுகளுக்கு இடையூறாக அமையும். இந்த விடயங்களின் அடிப்படையிலேயே சர்வதேச விசாரணைகளை அரசாங்கம் எதிர்க்கின்றது. நம்பகரமான உள்நாட்டு பொறிமுறையின் ஊடாக, பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது - என்றார். (ம-44)

### சிறுநீரகம்...

ராஜ் (வயது -30) என்ற இளைஞரே இவ்வாறு உயிரி ழந்தவராவார்.

திடீர் சுகவீனம் காரணமாக, கடந்த 8ஆம் திகதி மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)

### கடற்பரப்புகளில்...

கடற்பரப்புகள் ஆபத்தானவையாக மாறியுள்ளன. இதனால். கடற்படையினர் மற்றும் மீனவர்கள் கடற்பகுதிகளுக்குச் செல்லவேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் குறைந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளதால், நாட்டின் கடற்பரப்புகள் வெள்ளிக்கிழமை (நேற்று) காலை 10 மணி முதல் சனிக்கிழமை (இன்று) காலை வரை பலத்த காற்று, கனமழை மற்றும் கடல் கொந்தளிப்பாக இருக்கும். வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள குறைந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் தீவிரமடைந்து மேற்கு வடமேற்கு நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, மீனவர்களும் கடற்படையினரும் ஆபத்தான பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

அத்துடன், நாட்டின் கிழக்கில் வங்காள ஆழ்கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகள் வரை குறைந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் விரிவடையும் - என்றுள்ளது. (ம)

### இரு...

ளனர் என்று இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அனுர கருணாதிலக எதிர்வரும் 27ஆம் திகதி டில்லி செல்கின்றார். மும்பையில் நடைபெறும் இந்திய கடல்சார் மாநாட்டில் பங்கேற்பதற்காகவே அவர் அங்கு செல்கின்றார். இந்தியத் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சால், ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு, மும்பை கண்காட்சி மையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயணத்தின் போது, துறைமுகங்கள் அபிவிருத்தி, கப்பல் போக்குவரத்து மற்றும் தளபாடங்களில் இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக, அமைச்சர் கருணாதிலக, இந்தியத் துறைமுகங்கள், கப்பல்துறை, நீர்வழிகள் அமைச்சர் சிறி சர்பானந்த சோனோவாலுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் நடத்த உள்ளார். அதேவேளை, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவும் அடுத்த மாதம் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். நான்கு நாள் பயணமாக இந்தியா செல்லும் அவர், இந்திய வெளிவிவகார அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட முக்கியமான பிரமுகர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (எ-44)

### இந்துக்...

றது. நினைவேந்தல் குழுவின் செயற்பாட்டாளரும், நல்லூர் பிரதேசசபை உறுப்பினருமான க.ராகுலன் தலைமையில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் படுகொலைகளின்போது, தனது சகோதரியையும், சகோதரியின் குழந்தையையும் இழந்து தெய்வாதீனமாக உயிர்தப்பிய தாவடியைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி நகுலேஸ்வரன் பொதுச் சுடரேற்றி அஞ்சலித்தார். அதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டவர்களை நினைந்து ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன் நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள், நல்லூர் பிரதேச சபையின் உபதவிசாளர் இ.ஜெயகரன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் செ.ஜெகபாலன், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-66)

### அரசியல்வாதிகள்...

ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெலிகம பிரதேசசபைத் தவிசாளரின் கொலை தொடர்பில் விசாரணை இடம்பெற்று வருகின்றது. அதன் அடிப்படையில் துப்பாக்கிதாரிகள் மற்றும் அவர்களை இயக்கியவர்களை விரைவில் கைதுசெய்ய முடியும் என எதிர்பார்க்கின்றேன்.

மக்கள் பிரதிநிதிகளுக்குரிய பாதுகாப்பு நடவடிக்கை சம்பந்தமாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெளிவுபடுத்துவார். அத்துடன், பாதாளக் குழுக்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் தொடர்பான விவரத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விரைவில் வெளியிடுவார் - என்றார். (ம-44)

### நல்லூர்....

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நேற்றுமுன்தினம் இந்த விருது வழங்கும் நிகழ்வுகள் நடைபெற்றன. சுற்றாடல் பாதுகாப்பு சார்ந்த திட்டங்களுக்காக நல்லூர் பிரதேச செயலகத்துக்கு மெரிட் விருது வழங்கப்பட்டது. அத்துடன், சமூக வலைத்தள வினைத்திறனான செயற்பாட்டில், (பேஸ்புக் கணக்குக்காக) நல்லூர் பிரதேச செயலகத்துக்கு விசேட ஜூரி விருதும் வழங்கப்பட்டது.

இந்த விழாவில் 9 பிரிவுகளின் கீழ் மொத்தம் 132 விருதுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-40)

### உடைமையில்...

செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது. சந்தேகநபரிடம் இருந்து ஆறரைக்கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-26)

### ஹெரோய்னுடன்...

சிறப்புச் சுற்றிவளைப்பின்போது, ஹெரோய்னுடன் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து ஏழு கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவரிடம் இருந்து 3 கிராம் ஹெரோய்னும், ஏனையவர்களிடம் இருந்து 4 கிராம் ஹெரோய்னும் மீட்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர ஆளணியை நிரப்புவதில் யாழ்.பல்கலைக்கழகம் அசமந்தம்!

## பல்கலை ஊழியர் சங்கம் கண்டிப்பு 28 இல் அடையாள வேலைநிறுத்தம்

**யாழ்ப்பாணம்,ஒக்.25**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் கல்விசாரா ஊழியர்களின் நிரந்தரப் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி பெறுவதில் பல்கலைக்கழகப் பதிவாளர் மற்றும் துணைவேந்தர் ஆகியோர் அசமந்தப் போக்கைப் பின்பற்றுகின்றனர். இது திட்டமிட்டு கல்விசாரா ஊழியர்களின் செயற்றிறனை முடக்கி பல்கலைக்கழகத்தினை நலிவுப்படுத்தும் செயற்பாடே. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அழுத்தம் கொடுக்கும் முகமாக எதிர்வரும் 28 ஆம் திகதி அடையாள வேலைநிறுத்தம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளோம் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.**

இதுதொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் அனுப்பிவைக்கப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 355 வெற்றிடங்கள் காணப்படுகின்றபோதிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது கோரிக்கைக் கடிதத்தில் வெறும் 117 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி கேட்டுள்ளது. இது தவறென நாங்கள் பல தடவை சுட்டிக்காட்டியும் இன்றுவரை மாற்றப்படவில்லை.

இதற்கான காரணம் வேலையாட்கள் தரம் மற்றும் பொறியியல் சேவைகளில் காணப்படும் தரங்களுக்கான வெற்றிடங்கள் முறையற்ற விதத்தில் தனியார் நிறுவனங்களின் ஊடாக நிரப்பப்படுகின்றன. நிரந்தர ஆளணி நிரப்புவதில் ஆர்வம் காட்டாது தற்காலிக ஆளணியினரைப் பொருத்தமற்ற வழிகளில் நிரப்புவதில் முனைப்புக் காட்டப்படுகின்றது.

இது தற்காலிகமானது எனப் பதிவாளர் கூறியிருந்தபோதிலும் எதற்காக அனுமதிக்கடிதத்தில் அவ்வெற்றிடங்கள் வெளிப்படுத்தப்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது? என்பது எமக்கு இன்னும் பலவித ஐயங்களை ஏற்படுத்தியுள்ளது.

அதுமட்டுமல்லாது நாம் இது தொடர்பாக 4 கடிதங்களை எமது பேரவைத் தலைவருக்கு சமர்ப்பித்திருந்தபோதிலும் இன்றுவரை அது பேரவையினால் கலந்துரையாடப்படவில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்களாகிய நாம் எமது பல்கலைக்கழகத்தின் மாண்பையும், எதிர்கால சந்ததியினராகிய எமது மாணவர்களின்மீது எமக்குள்ள சமூகப் பொறுப்பையும் கருத்திற்கொண்டு பொருளாதாரச் சுமையால் பாதிக்கப்பட்டிருந்த எமது அரசின் கொள்கைகளுக்கு மதிப்பளித்தும் எமது நிரந்தர ஆளணியினரில் 1/3 பங்கிற்கும் (355 இற்கு) அதிகமான ஊழியர்கள் நிரந்தர நியமனம் செய்யப்படாமையால் ஏற்பட்ட பணிச்சுமைகள், அண்மையில் 4 பீடங்கள் புதிதாக உருவாக்கப்பட்டதானால் ஏற்பட்ட பணிச்சுமை தவிர அதன் காரணமாக உரிய வேளையில் எமக்குக் கிடைக்கப் பெறவேண்டிய பல நன்மைகளை இழந்தபோதும் எமது கடமைகளைச் சிறப்பாகச் செய்து எமது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளுக்கு பக்கபலமாக இருக்கின்றோம்.

எனினும் எமது பல்கலைக்கழக நிர்வாகத்துடன் கலந்துரையாடி ஏற்றுக்கொள்ளப்பட்ட 26 விடயங்களும் இன்று ஒரு வருடத்திற்கு மேலாக கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன.

இதற்கான தீர்வுகளும் இதுவரை கிட்டப்படவில்லை இது திட்டமிட்டு கல்விசாரா ஊழியர்களின் செயற்றிறனை முடக்கி பல்கலைக்கழகத்தினை நலிவுபடுத்தும் செயற்பாடாகவே நாம் கருதுகிறோம்.

எனவே, எமது ஊழியர் சங்க விசேட பொதுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி உரிய தரப்புகளுக்கு அழுத்தம் கொடுக்கும் முகமாக எதிர்வரும் 28 ஆம் திகதி அன்று அடையாள வேலைநிறுத்தம் ஒன்றினை மேற்கொள்வதுடன், எமது நியாயமான கோரிக்கைகள் அனைத்துக்கும் நியாயமான தீர்வு கிடைக்காத பட்சத்தில் எமது தொழிற்சங்க நடவடிக்கையைத் தீவிரப்படுத்தி அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் விஸ்தரிப்பது எனவும் தீர்மானித்துள்ளோம்- என்றுள்ளது. (ச)

# பரிசில் நாளும் நிறுவுநர் தினமும்

யாழ்ப்பாணம், ஒக்.25

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் பரிசில் நாளும் நிறுவுநர் தினமும் அதிபர் கி.சந்திரகுமார் தலைமையில் வித்தியாலய சுப்பையா அரங்கில் இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நினைவுப்பேருரை யினை நிகழ்த்த வுள்ளார். பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலாளர் பி.ச.சத்திய சோதி, சிறப்பு விருந்தி னராக ஓய்வுநிலை அதிபர் செ.பேரின்பநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-41-159)

### யாழில்

# சீரற்ற காலநிலையால் இரு குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.25

நிலவும் மழையுடன்கூடிய காற்றுக் காரணமாக யாழில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த அறுவர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார். அந்தவகையில் காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/45 கிராம சேவகர் பிரிவில் பலத்த காற்றுக் காரணமாக ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த அறுவர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-27)

**வேலையாட்கள் தேவை**

கோண்டாவிலில் இயங்கிவரும் பலசரக்கு கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. பகுதி நேர வேலைவாய்ப்புகளும் உண்டு.

தொடர்பு: 077 590 9501

**ஆண் வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் உள்ள செல்லப் பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றிட்கு வேலையாள் தேவை

சம்பளம் - 60,000/=

தொடர்புகளுக்கு:

077 937 0000

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை அல்வாய் முத்துமாரி அம்மன் கோயில் அருகாமையில் 18 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

* 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
* 16 அடி பாதையுடன் நிலப்பரப்பு
* அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயம் 100 m தூரம்
* பருத்தித்துறை பஸ் நிலையம் 1 1/2 km
* நெல்லியடி பஸ் நிலையம் 1 1/2 km
* மேட்டு நிலம், நண்ணீர் ஊற்று, குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
* 1 பரப்பின் விலை வீதி முகப்புடன் 10 லட்சம் ரூபாய்
* இரண்டாம் துண்டு 7 லட்சம் ரூபாய்
* 3 ம் துண்டு 5 லட்சம் ரூபாய்

**பார்வையிடும் நேரம் :**

காலை 08 மணிமுதல் மாலை 06 மணிவரை

**தொடர்பு: 076 8602 770
076 9878 617**

# மக்கள் பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு வேண்டும்

## நாடாளுமன்றத்தில் சஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.25

பாதாளக் குழுக்களால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதனால் உரிய வகையில் பாதுகாப்பு மீளாய்வைச் செய்து மக்கள் பிரதிநிதிகளுக்குப் பாதுகாப்பை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உள்ளூராட்சிசபை உறுப்பினர் முதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை தமக்குரிய மக்கள் சேவையை முன்னெடுக்கும்போது தற்போது பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. அதாவது பாதாளக் குழுவானது சமூகத்துக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

உரிய பாதுகாப்பு மீளாய்வின் பின்னர் மக்கள் பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என அரசதரப்பில் கூறப்பட்டது. அந்தப் பாதுகாப்பு மீளாய்வு எப்போது நிறைவுபெறும்? வெலிகம பிரதேசசபைத் தவிசாளரை சுட்டுக்கொலை செய்தவர்கள் எப்போது கைதுசெய்யப்படுவார்கள்? உள்ளூராட்சிச்சபை உறுப்பினர்கள் முதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை மக்கள் பிரதிநிதிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்றார். (எ-இ)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org